செ.வெ.எண். 55/பிப்ரவரி தேதி : 21.02.2017

**தருமபுரி மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளில் தங்கி பயிலும் 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிப் படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வாழ்க்கை வழிக்காட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நடைப்பெற்றது.**







2016 - 17 ஆம் ஆண்டிற்கான நமது மாவட்டத்திலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளில் தங்கி பயிலும் 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிப் படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வாழ்க்கை வழிக்காட்டி நிகழ்ச்சி (Career Guidance Programme) மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகத்துடன் இணைந்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையினரால் 18.02.2017 மற்றும் 19.02.2017 ஆகிய தினங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நடைப்பெற்றது.

இந்நிகழ்ச்சியின் மூலமாக விடுதி மாணவ/மாணவியர்கள் போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகளுக்கு எவ்வாறு தயார்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், எந்தெந்த துறையில் எவ்விதமான பணிகள் உள்ளன என்பதனையும் அப்பணிகளுக்கு எவ்வாறு விண்ணப்பித்து தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பேரில் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்ட நல விடுதிகளில் தங்கி பயிலும் 10-ஆம் வகுப்பு, 12-ஆம் வகுப்பு மற்றும் கல்லூரிப் படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு வாழ்க்கை வழிக்காட்டி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர், (வேலைவாய்ப்பு) கோவை திருமதி.ஆ.லதா, விழுப்புரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் உதவி இயக்குநர் திரு.எஸ்.மணி, முன்னால் படைவீரர் நல அலுவலகத்தின் உதவி இயக்குநர் (பொ) Ex.Lt.Col.

தி.சங்கீதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் உதவி இயக்குநர் திருமதி.ம.மகேஷ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ஜி.அமீர்பாஷா மற்றும் விடுதி காப்பாளர்/காப்பாளிகளுடன் விடுதி மாணவ/மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.